**<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No.178/2004**

Deposition of **<u>P.W.2</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 25.10.2025 in accordance with the provision of Act 1 of 1873.

Name : தமிழரசி Husband Name : சுப்ரமணியன்

துவக்க நேரம்: 03.21 P.M.

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

**<u>1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>** :

1. என் கணவர் தாக்கல் செய்த வழக்குரையின் விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியும். வழக்குரையின் 7 வது பத்தியில் எனது மாமியார் பார்வதி அம்மாள் சீனன் என்கிற அருணாச்சலத்திற்கு தாவா சொத்துக்களை 2 சம பாகங்களாக பிரிக்க கோரியும் மாதம் ரூ.200 ஜீவனாம்சம் வழங்க கோரியும் அறிவிப்பு வழங்கி உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் உள்ளது மேற்படி அறிவிப்பை பார்வதி அம்மாள் அவரது கணவரான சீனன் (எ) அருணாச்சலம் தன்னுடைய முதல் மனைவியின் 2 மகள்களுக்கு மட்டும் சில குறிப்பிட்ட சொத்துக்களை தானசெட்டில்மெண்ட் எழுதி வைத்ததால் அதற்கு மறுப்பு தெரிவிக்கவேண்டி மேற்படி அறிவிப்பை வழங்கினார். மேற்படி அறிவிப்பிற்கு சீனன் (எ) அருணாச்சலம் அனுப்பிய பதில் அறிவிப்பில் (பி.சா.ஆ.1) 7 ம் பிரதிவாதி தனக்கு திருமணம் நடைபெறவில்லை என்றும், வாதி தனக்கு பிறந்தார் என்பதை மறுத்தும் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான், ஆனால் சீனன் (எ) அருணாச்சலம் தனது மனைவி பார்வதியின் மீது இருந்த கோவத்தின் காரணமாக

மேற்கண்டவாறு பதில் அறிவிப்பு அனுப்பினார். அதிலுள்ள சங்கதிகள் உண்மை அல்ல. பி.சா.ஆ-1 ல் பார்வதி அம்மாள் சதார் சாகிப் என்பவருடன் தகாத உறவில் இருந்ததாகவும், அவர்கள் ஈரோடு மற்றும் பல்வேறு ஊர்களில் வசித்து வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் மேற்படி பதில் அறிவிப்பில் உள்ள விவரங்கள் உண்மையானதா என்று எனக்கு தெரியாது. மேலும் சீனன் (எ) அருணாச்சலம் தனது முதல் மனைவியின் தூண்டுதலின் பேரிலும் பார்வதியம்மாளின் மீது இருந்த கோவத்தின் பேரிலும் அவ்வாறு பதில் அறிவிப்பு வழங்கி இருக்கலாம். மேலும் மேற்கண்ட ஆவணம் அசல் ஆவணம் இல்லை என்பதால் அதன் உண்மை தன்மை பற்றி எனக்கு தெரியாது.

2. கடந்த 22.07.1965 ல் பி.சா.ஆ-1 ஆன பதில் அறிவிப்பு வழங்கியதிலிருநது 1975 ல் இந்த வழக்கு தாக்கல் செய்யப்படும் வரை இறந்து போன வாதி சுப்பிரமணியன் தன்னை DNA பரிசோதனைக்கு உட்படுத்திக்கொள்ளவில்லை என்றால் வழக்கு தாக்கல் செய்த போது எனது கணவருக்கு 19 வயது மட்டுமே நிறைவடைந்து இருந்ததால் தனது தந்தையை எதிர்த்து அவ்வாறு பரிசோதனைக்கு தன்னை உட்படுத்திக் கொள்ள வாய்ப்பு இல்லை. வழக்கு தாக்கல் செய்த பின்னரும் அதற்கான நடவடிக்கை எதுவும் 1ம் வாதி எடுக்கவில்லை என்றால் கடந்த 1975 ம் ஆண்டே எனது மாமனாரான சீனன் (எ) அருணாச்சலம் கவுண்டர் இறந்து விட்டார், அதன் பிறகு DNA பரிசோதனை எடுக்க இயலாது. DNA பரிசோதனையை தவிர்பதற்காகத்தான் கடந்த 1965-லேயே சீனன் (எ) அருணாச்சலம் பதிலறிவிப்பு கொடுத்திருந்த போதிலும் 1975 ல் அவர் இறந்த பின்னிட்டு 1ம் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல, 1975 க்கு பின்னிட்டு எனது கணவர் மேஜர் ஆன பின்பு இந்த வழக்கை தாக்கல் செய்தார்.

3. வா.சா.ஆ.25 ஆன வழக்கறிஞர் அறிவிப்பை பார்வதியம்மாள் எனது கணவர் சுப்பிரமணியனுக்கும் சேர்த்து வழங்கியுள்ளார் என்றால் சரிதான். மேற்கண்ட வழக்கறிஞர் அறிவிப்பிற்கு சீனன் (எ) அருணாச்சலம் பதில் அறிவிப்பு

வழங்கியிருந்த போதிலும் DNA பரிசோதனை செய்ய பார்வதியம்மாள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் எனது மாமியார் பார்வதியம்மாளும் சீனன் (எ) அருணாச்சலம் கவுண்டரும் மாமன் மகன் அத்தை மகளும் ஆவார்கள். அவர்கள் இருவரும் கருத்து வேறுபாடு காரணமாக பிரிந்து இருந்தார்கள். அதனால் மேற்கண்ட பரிசோதனை செய்ய பார்வதியம்மாள் நடவடிக்கை எடுக்கவில்லை. நான் சொல்வது தவறு என்றாலும் 1ம் வாதி பார்வதியம்மாளுக்கும், சீனன் (எ) அருணாச்சலம் கவுண்டருக்கும் பிறக்கவில்லை என்றாலும் DNA பரிசோதனை செய்தால் அந்த உண்மை தெரிந்துவிடும் என பார்வதியம்மாள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. சீனன் (எ) அருணாச்சலம் இறந்த போது எனது கணவர் தான் அவருக்கு அனைத்து ஈம சடங்குகளையும் செய்தார்.

4. கடந்த 15.05.1975ல் எனது கணவர், இறந்து போன சீனன் (எ) அருணாச்சலத்தின் வாரிசு என்பதற்கான வாரிசு சான்று கோரி ஆத்தூர் வட்டாட்சியரிடம் மனு கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது மாமனார் சீனன் (எ) அருணாச்சல கவுண்டரின் இறப்பு சான்றிதழில் மகன் என்று எனது கணவரின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த ஆவணம் ஏற்கனவே வா.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட ஆவணத்தில் எனது கணவரின் பெயர் தகவல் கூறும் நபரின் விவரம் என்ற காலத்தில் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் எனது கணவரின் பெயருக்கு கீழ் மகன் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்கண்ட ஆவணத்தை வைத்து எனது கணவரான 1ம் வாதி சீனன் (எ) அருணாச்சலத்தின் மகன் என்று உரிமை கோர இயலாது என்றால் சரியல்ல. எனது கணவர் உயிருடன் இருக்கும் வரை வாரிசு சான்றிதழ் கேட்டோ, சீனன் (எ) அருணாச்சல கவுண்டருக்கு அவரும் வாரிசு என விளம்புகை கோரியோ எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

5. சீனன் (எ) அருணாச்சல கவுண்டருக்கும் பார்வதியம்மாளுக்கும் திருமணம் நடைபெற்றதாக சொல்வதற்குண்டான ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் மேற்படி இருவருக்கும் திருமணம் நடைபெற்றது என்பது உண்மை. ஆனால் பத்திரிக்கை அடித்து திருமணம் செய்தார்களா என்ற விவரம் எனக்கு தெரியாது. கடந்த 06.02.1956 ல் எனது கணவர் பிறந்த தேதி என குறிப்பிட்டுள்ளது இந்த வழக்கிற்காக எனது கணவரால் வேண்டுமென்றே நிர்ணயிக்கப்பட்ட தேதி என்றால் சரியல்ல. வா.சா.ஆ.21 ஆவணமானது எனது கணவரின் பிறந்த தேதி 06.02.1956 என குறிப்பிட்டு வழக்கிற்காக, வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு உருவாக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. மேற்கண்ட ஆவணத்தில் 06.02.1956 ல் பார்வதியம்மாள் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், அந்த தேதியில் குழந்தை பிறந்ததாக குறிப்பிடப்படவில்லை என்றாலும் சரியல்ல, அந்த ஆவணத்தில்ல ஆண் குழந்தை பிறந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனது மாமியார் பார்வதியம்மாளுடன் உடன்பிறந்த சகோதரிகள் மூன்று நபர்கள் என்றால் சரிதான். அவர்கள் ராமாயி அம்மாள், பாப்பாத்தியம்மாள், சுந்தராம்பாள் ஆகியோர்கள் ஆவார்கள்.

6. எனது மாமியார் பார்வதியம்மாளின் சகோதரி பாப்பாத்தியம்மாள் என்பவர் நாகியம்பட்டி கிராமத்தை சேர்ந்தவர் என்றால் அவர் பிறந்த ஊர் தான் நாகியம்பட்டி, ஆனால் வெள்ளையூரில் திருமணம் செய்து கொண்டார். மேற்கண்ட பாப்பாத்தியம்மாளுக்கு செல்லம் என்ற ஒரு மகள் உள்ளார் என்றால் சரிதான். மேற்படி செல்லம் என்பவர் பெரம்பலூர் மாவட்டம் இரூர் கிராமத்தில் திருமணம் செய்து கொண்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

7. தாவா B அட்டவணை சொத்தில் ச.எண்.87/2 ல் உள்ள 3 ஏக்கர் 37 செண்ட் நிலத்தில் 1947 ல் சேலம் நீதிமன்றத்தில் இறுதிநிலை தீர்ப்பாணையின் படி சீனன் (எ) அருணாச்சல கவுண்டருக்கு ஏக்கர் 1.68 ½ செண்ட் நிலம் ஒதுக்கப்பட்டது என்றால் அது பற்றி சரியான விவரம் எனக்கு தெரியவில்லை. மேற்படி

ச.எண்ணிலுள்ள மீதமுள்ள ஏக்கர் 1.68 ½ செண்ட் இடமானது அதே தீர்ப்பாணையின் படி ஏ அட்டவணையில் முத்துகுமாரசாமி கவுண்டருக்கு பாகமாக ஒதுக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சீனன் (எ) அருணாச்சல கவுண்டர் தனக்கு ஒதுக்கப்பட்ட ச.எண்.87/2 ல் உள்ள இடத்தை 17.04.1963 ல் ராமசாமி பண்டாரம் மகன் கந்தசாமி பண்டாரம் என்பவருக்கு விற்பனை செய்து விட்டார் என்றால் சரிதான். மேற்படி கந்தசாமி பண்டாரத்தின் வாரிசுகள் இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளார்கள். வழக்கு தாக்கல் செய்வதற்கு 13 ஆண்டுகளுக்கு முன்பு விற்பனை செய்த இடத்தையும் சேர்த்து வழக்கு தாக்கல் செய்ய எனது கணவருக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. மேற்படி விவரங்களை வழக்குரையில் குறிப்பாக குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

8. 1947 ம் ஆண்டு வழங்கிய தீர்ப்பாணையில் 19 வது இனமாக காட்டப்பட்டு சீனன் (எ) அருணாச்சல கவுண்டருக்கு ஒதுக்கப்பட்ட வீட்டினை இவ்வழக்கு சொத்தில் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. 1947 ம் ஆண்டு இறுதிநிலை தீர்ப்பாணையில் காட்டப்பட்டுள்ள சொத்துக்கள் முழுவதும் இந்த வழக்கில் வழக்கு சொத்தாக சேர்க்கவில்லை என்பதால் வழக்கில் கோரியுள்ள பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.25 ஆவணத்தில் பார்வதியம்மாள் அனுப்பிய அறிவிப்பில் இராசிபுரத்திலுள்ள விலாசம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.6 ஆவணத்திலுள்ள எண்.13 சின்ன அக்ரஹாரம் இராசிபுரம் என்ற எனது மாமியார் பார்வதியம்மாள் வசித்து வந்த விலாசத்தில் தான் அப்துல் சக்தார் என்பவரும் வசித்து வந்தார் என்றால் அது பற்றி தெரியாது. சீனன் (எ) அருணாச்சலத்தின் தாயார் செல்லமுத்தியம்மாள் என்பவருக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்தான ச.எண்.139/2 ல் உள்ள சொத்திற்கு வழங்கப்பட்ட பட்டாவில் பார்வதியம்மாள் பெயரை நீக்கி 1 முதல் 4 பிரதிவாதிகள் பெயரில் வழங்க ஆத்தூர் மண்டல துணை

வட்டாட்சியரால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. செல்லமுத்தியம்மாளுக்கு தனிப்பட்ட சொத்துக்கள் எதுவும் இல்லை. அனைத்தும் குடும்ப சொத்துக்கள் தான். எனது கணவர் தாவாவில் சொத்த விவரத்தில் நகைகள், பணவரவு செலவு பற்றி குறிப்பிடாத நிலையில் எனது முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தில் அவை பற்றி நான் கூறியுள்ளது ஏற்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. மேற்படி நகைகளை குடும்ப உறுப்பினர்கள் அணிந்திருப்பதற்கான புகைப்படங்களை தாக்கல் செய்துள்ளோம். எனது நிரூபண வாக்குமூலத்தில் 10 முதல் 14 பிரதிவாதிகள் குடும்ப சொத்துக்களை கிரையம் பெற்ற நபர்கள் என்று குறிப்பிட்டுள்ள நிலையில் அந்த கிரைய ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளோம். மேற்கண்ட கிரைய ஆவணங்கள் செல்லாதவை என விளம்புகை பரிகாரமும் இவ்வழக்கில் கோரவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. வழக்குரையில் குறிப்பிடாத விவரங்களை எனது முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தில் கூறியுள்ளதால் எனது சாட்சியம் ஏற்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல.

9. எனது சாட்சியம் வழக்குரைக்கும், ஆவணங்களுக்கும் முரண்பாடாக உள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.7 ஆவணமான தானசெட்டில்மெணட் ஆவணத்தை சீனன் (எ) அருணாச்சல கவுண்டர் 2 முதல் 4 பிரதிவாதிகள் பெயரில் தான் எழுதியுள்ளார் என்றாலும், 1 முதல் 4 பிரதிவாதிகள் பெயரில் எழுதியுள்ளார் என்றாலும் சரியல்ல.

10. எனது கணவர் சீனன் (எ) அருணாச்சல கவுண்டரின் வாரிசு என்பதை நிரூபணம் செய்தால் மட்டும் தான் அவருக்கு வழக்கில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கும் என்றால் சரியல்ல. 1ம் வாதி சுப்ரமணியன் சீனன் (எ) அருணாச்சல கவுண்டரின் வாரிசு என்று நிரூபித்தால் கூட வழக்கில் கோரியுள்ளவாறு பாக விகிதம் அவருக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 1ம் வாதி, 1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகளின் சொத்துக்களை அபகரிக்கும் நோக்கத்தில்

பொய்யான ஆவணங்கள் தயார் செய்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முடித்துகொள்ளப்பட்டது.

4ம் பிரதிவாதி தரப்பு வேண்டுகோளின் பெயரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

முடிவு நேரம்: 05.06 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him /her to be correct

Sd/-D.Jansi Rani,
Additional District Munsif, Attur

Typed by Tmt. S.Umamaheswari - O.S. No.178/2004 , Dt.25.10.2025.